**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.4662/ஆ5/2025, நாள். 16.09.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – சமூகநீதி நாள் – 17.09.2025 அன்று தந்தை பெரியார் பிறந்த தினத்தினை முன்னிட்டு உறுதிமொழி எடுப்பது – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.அ4/e.1321001/2023, நாள். 15.09.2025

•••••

பார்வையில் காணும் மதிப்பிற்குரிய வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தித்தில், 17.09.2025 அன்று சமூக நீதி நாள் அனுசரிக்கும் பொருட்டு உறுதிமொழி எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் 17.09.2025 அன்று காலை 11.00 மணிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உறுதிமொழியினை எடுக்குமாறு சார்ந்த அலுவலர்கள் மற்றும் அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – உறுதிமொழி

16.09.25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் கல்வி மாவட்டம்
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்–
வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

# சமூக நீதி நாள்

## உறுதி மொழி

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு
நெறியையும் –
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியையும்
எனது வாழ்வியல் வழிமுறைகளாகக் கடைப்பிடிப்பேன்!

சுயமரியாதை ஆளுமைத் திறனும் – பகுத்தறிவுப்
பார்வையும் கொண்டவையாக என்னுடைய
செயல்பாடுகள் அமையும்!

சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய
கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக்
கொள்வேன்!

மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும்
போற்றுவேன்.

சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட
இந்த நாளில் உறுதியேற்கிறேன்!